பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 10 2024 **TUESDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வங்கக்கடலில் இரண்டு காற்றழுத்தங்கள் காரணமாக, தமிழகத்தில் அடுத்த இரண்டு தினங்களுக்கு கன முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது
2. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகும் பொதுமக்களை தங்க வைக்கும் வகையில் நிவாரண மையங்கள் தயார்நிலையில் உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
3. உலக அளவில் தொலைத்தொடர்பு துறையில் இந்தியா வெகுவாக முன்னேற்றம் கண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
4. மகாராஷ்ட்ரா, ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தல், தேதியை இன்று பிற்பகல் தேர்தல் ஆணையம் அறிவிக்கவுள்ளது.
5. லண்டனில் நடைபெற்று வரும் **WR** செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில், இந்தியாவின் ஐந்து கிராண்ட மாஸ்டர்கள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>><<<<**

வங்கக்கடலில் இரண்டு காற்றழுத்தங்கள் காரணமாக, தமிழகத்தில் அடுத்த இரண்டு தினங்களுக்கு கன முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

வங்கக்கடலின் தென்மேற்கு பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மற்றொரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி, மேற்கு மத்திய வங்கக்கடல் பகுதியில், ஆந்திராவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ளதாகவும் மேலடுக்கு சுழற்சி காரணமாக இது மேலும் வலுப்பெறக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் எழுந்துள்ள இத்தகைய சூழல் காரணமாக, தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

கடல் அலைகள் அதிக உயரத்திற்கு எழக்கூடும் என்பதால், கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களும், சுற்றுலாப் பயணிகளும் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்குமாறு மாநில பேரிடர் நிர்வாக மையம் அறிவுறுத்தியுள்ளது.

மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைக்குமாறும் அந்த மையம் கேட்டுக் கொண்டுள்ளது.

மழையின் தாக்கத்தால் பாதிக்கப்படுபவர்கள் உடனடியாக தங்களது புகார்களை தெரிவிப்பதற்கு வசதியாக 1 9 1 3 என்ற இலவச தொலைபேசி எண்ணை பயன்படுத்தலாம் என்று மாநில அரசு கூறியுள்ளது.

24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைகள் செயல்பட்டு வருவதை அடுத்து புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்றிரவு முதல் இடிமின்னலுடன் கூடிய மழை பெய்து வருகிறது.

தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பணிகளை சென்னை மாநகராட்சி பணியாளர்களும், பேரிடர் மீட்புப் படையினரும் மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நிவாரண மையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடனடியாக நிவாரண மையங்களுக்கு செல்லுமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுமக்கள் மின் கம்பிகள் அறுந்துகிடக்கும் பகுதிகள் மற்றும் மின் மாற்றிகள் இருக்கும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அறிவுறுத்தியுள்ளது.

சென்னையில் மெட்ரோ ரயில் சேவை இன்று முதல் மூன்று நாட்களுக்கு கூடுதலாக இயக்கப்படும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், சென்னை, யானைக்கவுனி. பேசின் பிரிட்ஜ் பகுதிகளில் மழை வெள்ள பாதிப்பு குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

மழை வெள்ள பாதிப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து, சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை கட்டுப்பாட்டு மையத்தில் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகும் பொதுமக்களை தங்க வைக்கும் வகையில் 931 நிவாரண மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - உதயநிதி 51 செகண்ட்ஸ்)

பருவமழை நோய் பாதிப்புகளை தடுக்கும் வகையில் மாநிலம் முழுவதும் ஆயிரம் இடங்களில் இன்று மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மருந்துகள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

கோவை, சிங்காநல்லூர் அருகே மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாநில அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி ஆய்வு செய்தார்.

சேலம் மாநகராட்சியில் மழையை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கனமழை எச்சரிக்கையை அடுத்து, தமிழகம் முழுவதும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

நாமக்கல் மாவட்டத்தில் மாரப்பம்பாளையம், பள்ளாபாளையம் கிராமங்களில் 20-க்கும் மேற்பட்ட வீடுகளில் மழைநீர் புகுந்தது. அங்குள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டத்தில் மழை தொடர்பான புகார்களை 1 0 7 7 மற்றும் 0 4 3 1 – 2 4 1 8 9 9 5 என்ற தொலைபேசி எண்ணுக்கு கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்று ஆட்சியர் திரு பிரதீப் குமார் கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்துறை மூலம் 2 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு ஆறுகள் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டுள்ளதாகவும், பருவமழையை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார்நிலையில் உள்ளதாகவும் ஆட்சியர் திருமதி. சாருஸ்ரீ தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக, பேச்சிப்பாறை அணையிலிருந்து வினாடிக்கு 250 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக கோதையாறு, தாமிரபரணி, பரளியாறு மற்றும் திற்பரப்பு அருவியில் குளிக்க தடை செய்யப்பட்டுள்ளது.

குழித்துறை தரைப்பாலம் மூழ்கியதால் போக்குவரத்து அங்கு தடை செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், கொடிவேரி அணைக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா பாசனப்பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு வினாடிக்கு 500 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

உலக அளவில் தொலைத்தொடர்பு துறையில் இந்தியா வெகுவாக முன்னேற்றம் கண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலக தொலைத்தொடர்பு தர நிர்ணய மாநாட்டை இன்று புதுதில்லி பாரத் மண்டபத்தில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

உலக அளவில் 40 சதவீதத்திற்கும் அதிகமான டிஜிட்டல் பரிமாற்றங்கள் இந்தியாவில் மேற்கொள்ளப்படுவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

குறைந்த விலையில் சாதனங்கள், கடைக்கோடி பகுதியிலும் இணைய வசதி, குறைந்த கட்டணத்தில் தரவு வசதி, டிஜிட்டல் செயல்பாட்டுக்கு முன்னுரிமை ஆகியவற்றின் மூலமாக டிஜிட்டல் இந்தியா என்ற இலக்கை நோக்கி மத்திய அரசு வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாக பிரதமர் கூறினார்.

உலக தொலைத்தொடர்பு தர நிர்ணய மாநாடு, சர்வதேச அளவில் தர நிர்ணயத்தை உறுதிப்படுத்த உதவுவதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்த மாநாடானது முதல்முறையாக இந்தியாவில் நடைபெறுகிறது.

இதில் 190 நாடுகளைச் சேர்ந்த தொலைத்தொடர்பு நிறுவன அதிகாரிகள், நிபுணர்கள் பங்கேற்றுள்ளனர்.

6-ஜி, செயற்கை நுண்ணறிவு, சைபர் பாதுகாப்பு உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

>>>><<<<

மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் இன்று உலக மாணவர் தினம் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வளர்ச்சியடைந்த இந்தியா என்னும் இலக்கை நோக்கி பயணிப்பதில் அப்துல் கலாமின் சிந்தனைகள் பேருதவி புரிவதாக தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், கல்விக் கனவை நனவாக்கத் தேவையான கடும் உழைப்பை கொண்டிருந்தால் இளைஞர்கள் வாழ்வில் உயர்வை பெறலாம் என்று கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, சென்னை, கிண்டி அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு தமிழக அமைச்சர்கள் மரியாதை செலுத்தினர்

ராமநாதபுரம் மாவட்டம், பேய்க்கரும்பில் உள்ள அப்துல்கலாம் நினைவிடத்தில் மக்கள் மரியாதை செலுத்தினர்.

>>>><<<<

மகாராஷ்ட்ரா, ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பான அறிவிப்பை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடவுள்ளது.

புதுதில்லியில் இன்று பிற்பகல் நடைபெறும் செய்தியாளர்கள் சந்திப்பின் போது, அம்மாநிலங்களுக்கான தேர்தல் அட்டவணையை ஆணையம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

>>>><<<<

லண்டனில் நடைபெற்று வரும் **WR** செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில், இந்தியாவின் ஐந்து கிராண்ட மாஸ்டர்கள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

கிராண்ட் மாஸ்டர்கள் விஸ்வநாதன் ஆனந்த், அர்ஜுன் எரிகேஸி, விடித் குஜராத்தி, பிரக்ஞானந்தா மற்றும் ரௌனக் சாத்வானி ஆகியோர் காலிறுதி போட்டியில் பங்கேற்கின்றனர்.

>>>><<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் **Hamilton** ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

உலகக்கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இங்கிலாந்து இன்று வெஸ்ட் இண்டிஸ் அணியை எதிர்கொள்கிறது.

>>>>END<<<<